2 பாய்மங்கள்

பெயர்: _____

1. கோடிட்ட இடத்தை நிரப்பவும்

1. விசையின் அலகு _____ ஆகும்
2. எண்மதிப்பும் திசையும் கொண்டுள்ளதால் விசை ஒரு _____ அளவு ஆகும்.
3. நீர்மத்தின் மீதான அழுத்தத்தை அதிகரிக்க அதன் மீது செயல்படும் உந்து விசையை _____ வேண்டும்.
4. அழுத்த த்தின் S.I அலகு _____ ஆகும்.
5. வளிமண்டலத்தில் காற்றினால் ஏற்படும் அழுத்தம் _____ எனப்படும்.
6. திரவங்களின் ஆழம் அதிகரிக்க அதிகரிக்க _____ அதிகரிக்கும்.
7. வளிமண்டல அழுத்தத்தை அளவிட உதவும் கருவி _____ ஆகும்.
8. காற்றழுத்த மானியைக் கண்டறிந்தவர் _____ ஆவார்.
9. பழரசம் அருந்தப் பயன்படும் உறிஞ்சுகுழல் _____ ஆல் வேலை செய்கிறது
10. மழைத்துளிகள் இயற்கையாகவே கோள வடிவத்தைப் பெற்றிருப்பதற்கு காரணம் நீரின் _____ விசையாகும்.

II. சரியா ? தவறா? கூறுக

1. நீரியல் அழுத்தி பாஸ்கல் விதி தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகிறது.
2. நீரின் அடர்த்தி சமையல் எண்ணெ யின் அடர்த்தியை விட குறைவு
3. நன்னீரை விட உப்பு நீர் அதிகமான மிதப்பு விசையை ஏற்படுத்தும்
4. திரவமானது கொள்கலனின் அடிப்பாகத்தில் மட்டுமல்ல அதன் சுவர்களின் மீதும் அழுத்தத்தை செலுத்துகிறது.
5. ஒரு பொருளின் எடை மிதப்பு விசையை விட அதிகமாக இருந்தால் அப்பொருள் மூழ்கும்.

ஆக்கம்: ப.லோகநாதன், பட்டதாரி ஆசிரியர், அ.உ.நி.ப கெட்டுஅள்ளி

LIVEWORKSHEETS